சிக்மா பம்ப்ஸ்
(CEYGMA PUMPS)
-நம்பிக்கையானவை
-நீடித்து உழைப்பவை
யுனிரெட் அக்ரோ என்ஜினியரிங்
274|1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22747

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/=

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

மண்ணெண்ணெயில் இயங்கும்
உலகப் பிரசித்திபெற்ற
இங்கிலிஷ் வில்லியர்ஸ்
பொருத்தப்பட்ட
2'' ஜூனியர்
மின்சாரத்தில் இயங்கும்
அமெரிக்கன் மோட்டர்
1 H.P., 1 1|2 H.P.
பொருத்தப்பட்ட
சிக்மா பம்ப்ஸ்
தற்பொழுது விற்பனையாகின்றன.

சுடர்: 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு தை மீ உ 29 செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா. ஆகிர் பிறை 1 (11-02-1986) UTHAYAN —A LIVELY TAMIL DAILY கதிர்:-73

## இனப் பிரச்சினைத் தீர்வுக்கு

# புதிய யோசனை சமர்ப்பிக்கும்படி கேட்கிறது இந்தியா

கொழும்பு, பெப். 11

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு புதிய யோசனைகளைச் சமர்ப்பிக்கும்படி இந்திய அரசாங்கம், இலங்கையைக் கேட்டுள்ளது.

இந்திய அரசின் இக்கோரிக்கையை, இலங்கையில் உள்ள இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் ஜனாதிபதி ஜெயவர்த்தனவிடமும் தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியிடமும் நேரில் சந்தித்துக் கூறிவிட்டார்.

கடந்த சனி, ஞாயிறு தினங்களில் திரு டிக்ஸிற் திரு. லலித் அத்துலத் முதலியை பலதடவை கள் சந்தித்துப் பேசினார்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் இந்திய உதவி தேவையா? இது பற்றி அழுத்தந் திருத்தமான பதில் தேவை - இப்படி இப் பேச்சுக்களில் திரு. டிக்ஸிற் கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது

இலங்கை அரசின் 57 பக்கப் பதில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்றுயோசனைகளை முற்றாக நிராகரிப்பதாக அமைந்துள்ளது

ஆகவே இலங்கை அரசு ஆக்கபூர்வமான புதிய யோசனைகளைச் சமர்ப்பித்தால் தான், இனப் பிரச்சினைக்கான தீர்வை இந்தியா முன் எடுத்துச்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் 40பேர் கைது

யாழ்ப்பாணம், பெப் 11

மன்னாரில் நேற்று முன்தினம் 40க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

மன்னார் நகரில் நேற்று முன்தினம் காலை ஆயுதப் படையினர் திடீர் தேடுதல் நடத்தி வீடு ஒன்றில் இருந்து இளைஞர் ஒருவரைக் கைது செய்து முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

இதனை அடுத்து மீண்டும் தேடுதல் நடத்தப் பட்டபோதே 40க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

# தீர்வுகாணும் பொறுப்பு இந்தியாவிடம்தான்

## ராஜீவ் கேள்விக்கு லலித் பதில்

கொழும்பு, பெப். 11

இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான பொறுப்பு இந்தியாவின் கையிலேயே இருக்கிறது.

தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி இப்படித் தெரிவித்தார்.

இந்தியாவின் முயற்சியில் இலங்கை அரசுக்கு அக்கறை இல்லாவிட்டால் அதனை நேரடியாகத் தெரிவிக்கவேண்டும் என்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மாலைதீவில் வைத்து கூறியிருந்தார் அல்லவா?

அதற்குப் பதிலளிக்கும்வகையில் திரு. லலித் அத்துலத் முதலி நேற்று கருத்து வெளியிட்டார்

தீர்வு காண்பதற்கும் சுமுகநிலை ஏற்படுத்துவதற்குமான பொறுப்பு இன்னமும் இந்தியாவின் கைகளில்தான் இருக்கிறது என்று அவர் சொன்னார்.

பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை ஏற்பட்டதற்கு திரு. அமிர்தலிங்கம்தான் காரணம் என அவர் குற்றம் சுமத்தினார். புதுடில்லியில் இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி -திரு. எச். டபிள்யூ. ஜெயவர்த்தன சந்திப்பின்போது வடக்கு, கிழக்கு இணைப்பு இல்லாத ஒரு சுயாட்சி அமைப்பை ஏற்பதாக திரு. அமிர்தலிங்கம் உறுதி கூறியிருந்தார்.

ஆனால் தற்போது இந்த அடிப்படை விடயத்தில் அவர் தாம் அளித்த உறுதியை மீறியிருப்பதே பேச்சுவார்த்தை முறியும் சூழ்நிலை ஏற்பட்டதற்குக் காரணம் - இப்படி திரு. அத்துலத் முதலி தெரிவித்தார்.

## சுதந்திரப் போரில் கிழக்கு மக்களின் பிரதிநிதி

### கணேஷின் இறுதிச் சடங்கில் நீலன்

மட்டக்களப்பு, பெப். 11

தமிழ்இனச் சுதந்திரப் போராட்டத்தில் கிழக்கு இலங்கை மக்களின் சார்பில் முக்கிய பங்கு வகித்தவர் திரு. கணேசலிங்கம்.

இப்படி கூட்டணிப் பிரமுகர் டாக்டர் நீலன் திருச்செல்வம் சொன்னார்.

தகனக் கிரியைக்கு முன்னர் தாமரைக்கேணி இல்லத்தில் நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் டாக்டர் நீலன் திருச்செல்வம் இப்படிச் சொன்னார்.

இந்திய மக்களின் சார்பில் இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் தெரிவித்த அனுதாபத்தை டாக்டர் திருச்செல்வம் திரு. கணேசலிங்கத்தின் குடும்பத்தினரிடம் சமர்ப்பித்தார்.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் மட்டக்களப்பு கல்லியங்காடு மயானத்தில் தகனக் கிரியை இடம்பெற்றது. புதல்வன் முகுந்தன் தந்தையின் சிதைக்குத் தீ மூட்டினார்.

## முச்சந்தி முரளி



ராஜீவ் கேட்கிற கேள்விக்கு ஜே. ஆர். எல்லோ பதில் சொல்ல வேணும், இவர் லலித் ஏன் முந்திரிக் கொட்டை மாதிரி எல்லாத்திலையும் முந்தப் பார்க்கிறார்!

## காவலிலிருந்த 9 தமிழ் இளைஞர் சுடப்பட்டனர்!

### 'புலி'கள் குற்றச்சாட்டு

சென்னை, பெப். 10

யாழ்ப்பாணம் அயுதபடை முகாம்களில் சிப்பாய்களுக்கு இடையே நடந்த கலகத்தில், காவலில் வைக்கப்பட்டிருந்த 9 தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிவித்தல் ஒன்றில் குற்றம் சாட்டி உள்ளனர்.

இச்சம்பவத்தினால் ஏற்பட்ட பதற்றத்தைத் தணிக்குமுகமாக அமைச்சர் லலித் அத்துலத்முதலி யாழ்ப்பாணத்துக்கு அவசரமாகச் சென்றுள்ளார் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## கடத்தப்பட்ட மாணவி விடுவிக்கப்பட்டார்

யாழ் நகர் 24 மனை செட்டியார் இனத்தைச் சேர்ந்த மாணவி விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மூன்றும் திகதி இவர் கடத்தப்பட்டது தெரிந்ததே.

இது சம்பந்தமாக யாழ் நகர் 24மனை செட்டியார் மகாஜன சங்கம் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

இம் மாணவியின் விடுதலைக்கு உதவிய புனித விடுதலை இயக்கங்களுக்கும், வர்த்தக சங்கங்களுக்கும், பொதுநல சேவைச் சங்கங்களுக்கும், பொதுமக்களுக்கும், நண்பர்களுக்கும் அதில் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'ஈழநாடு' வாழி பல்லாண்டு!

யாழ்ப்பாணத் தமிழ் மண்ணிலிருந்து மூன்று தமிழ்த் தினசரிகள் இன்று வெளிவருகின்றன. அப்பப்பா நினைக்க முடியாத சாதனை!

அதிக சம்பவங்கள் அனேக அரசியல் மாற்றங்கள். அதனால் அவற்றை அறிய வேண்டும் என்ற மக்களின் ஆவல் - அக்கறை.

இதுவே—

ஒரு மாகாணத் தலைநகரிலிருந்து மூன்று தினசரிகள் போட்டிபோட்டுக்கொண்டு விற்பனையாவதற்குக் காரணி என்று பலரும் கருதுகிறார்கள். அதுவும் சரிதான்.

ஆனால்—

தமிழ் என்றும் ஆங்கிலம் என்றும் கொழும்புத் தினசரிகள் வடக்கில் கொடி கட்டிப் பறந்த காலத்தில் தமிழ் தேசிய தினசரி ஒன்றை ஆரம்பிக்க நினைத்தது பெருந் துணிச்சல்!

பல இடுக்கண்களுக்கு மத்தியிலும் ''ஈழநாடு'' பத்திரிகையை 27 வருடங்களுக்குமுன் ஆரம்பித்த திரு. கே.சி. தங்கராசாவின் தீர்க்கதரிசனம் பாராட்டப்பட வேண்டியது. அந்த வகையில் அவர் ஒரு முன்னோடி.

அவர் தமிழ் மக்களுக்குத் தந்த ''ஈழநாடு'' இன்று பெப்ரவரி 11 ஆம் திகதி 27 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.

பச்சிளம் பாலகனான ''உதயன்'' அந்த மூத்த சகோதரனான 'ஈழநாடு'வுக்கு தனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றான்.

மேலும் வாழி பல்லாண்டு!

— ஆசிரியர்.

## சுபநேரம்

11.2.1986

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:

11.04 முதல் 12.34 வரை

ராகுகாலம்:

3.34 முதல் 5.04 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## பாதுகாப்பு வலய சட்டமூலம் நாடாளுமன்றில்

கொழும்பு, பெப். 11

யாழ் குடா நாட்டில் உள்ள பாதுகாப்பு வலயம், கண்காணிப்பு வலயம் அனைத்தையும் ஒரு வலயமாக மாற்றிஅமைக்கும் சட்டவிதிகளை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிகிறது.

அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் இச்சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று கூறப்படுகிறது.

## மா வந்தது

யாழ்ப்பாணம், பெப் 11

950 மெட்ரிக் தொன் அரிசியுடன் கப்பல் ஒன்று நேற்றுக் காங்கேசன்துறை துறைமுகம் வந்தது.

## நால்வர் பலி?

திருகோணமலை, பெப் 11

தம்பலகமம் கிராமத்தில் நேற்று ஆயுதப்படையினர் தீவிர தேடுதலில் ஈடுபட்டனர்.

அச்சமயம் நான்கு தமிழர் துப்பாக்கிக் குண்டு தாக்கி மரணமானதாக முதலில் வந்த செய்திகள் தெரிவித்தன.

வேறு விவரம் எதுவும் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை வரவில்லை.

## வழிமறித்து சுடப்பட்டு

# தமிழர் மூவர் காரோடு எரிப்பு வவுனியாவில்

## சீருடை அணிந்தோர் அட்டூழியம்!

— அலுவலகச் செய்தியாளர்:- வனிதராஜன் —

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்ப்பாணத்தில் இருந்து சிலாபத்துக்குச் சென்ற மூன்று தமிழர்கள் வவுனியாவில் வழிமறிக்கப்பட்டனர். காரில் இருந்து இறக்கப்பட்டு துடிக்க, துடிக்க சுடப்பட்டனர்.

பின்னர் அவர்களின் சடலங்கள் காருக்குள் போட்டு, பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்டன.

சீருடை அணிந்திருந்த ஆயுதந் தாங்கிய கோஷ்டி ஒன்று இந்த அட்டூழியத்தை நேற்றுப் புரிந்தது.

வவுனியாவில் உள்ள பேயாடிக் கூளாங்குளம்-வெளிக்குளம் சந்திக்கு அருகில் நேற்றுக்காலை இந்தக் கோரச் சம்பவம் இடம்பெற்றது

யாழ்ப்பாணத்தில் இருந்து சிலாபம் நோக்கி பயணம் செய்த மூன்று பேருக்கே இக்கதி ஏற்பட்டது.

இறந்தவர்கள் விவரம் வருமாறு:-

1. திரு. திமோதின் யேசுநாயகம் (வயது 36). இவர் யாழ்ப்பாணம் ரி. ஜே. எம். போக்குவரத்துச்சேவை உரிமையாளர்.

இரு பிள்ளைகளின் தந்தை. யாழ். 3ம் குறுக்குத் தெருவில் வசித்து வந்தார்.

2. திரு. பி. மயில்வாகனம், வயது 45. பளைவாசி. ஆர். வி. ஜி. போக்குவரத்துச்சேவைப் பகுதி கணக்காளர்.

3. வின்சன்ட் (மனோ) வயது 46. உதவியாளர்.

மூன்று பேரும் நேற்றுக்காலை 5 மணியளவில் 404 பேஜோ 7ஸ்ரீ 8651 இலக்க காரில் சிலாபம் நோக்கிப் புறப்பட்டனர்.

கார் திரு. யேசுநாயகத்துக்குச் சொந்தமானது

ஆர். வி. ஜி. போக்குவரத்துச் சேவைக்குச் சொந்தமான லொறி சிலாபத்துக்கு அருகில் புரண்ட சம்பவம் பற்றி

(4ஆம் பக்கம் பார்க்க)

# கச்சேரிக்கு அன்னையர் திடீரென படை எடுப்பு!

## முகாமிலுள்ள பிள்ளைகள் கதிஅறிய

## விளைவு: இன்று சந்திக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 11

தடுப்புக்காவலில் இருக்கும் தமிழ் இளைஞர்களின் தாய்மார் 26 பேர் நேற்றுத் திடீரென யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்துக்கு ''படை எடுத்தனர்.'' தமது புதல்வர்கள் உயிருடன் இருக்கிறார்களா என்பதை அறிவதற்காகவே அவர்கள் இவ்வாறு திடீரென படையெடுத்தனர்.

இந்தப் படையெடுப்பின் விளைவாக பலாலி, யாழ்ப்பாணம் கோட்டை முகாம்களில் இருக்கும் தமது பிள்ளைகளை இன்று காலை அவர்கள் சென்று பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆயுதப்படை முகாம்களில் 9 தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டதாக செய்திகள் வெளிவந்ததையடுத்தே தாய்மார்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மூன்றில் ஒரு பகுதி நாடு பறிபோய் விட்டதாம்!

## ஜே. ஆரை ஒதுக்கிவிட்டார் தொண்டா

### ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூறுகிறார்

கொழும்பு, பெப். 11

நாட்டின் மூன்றில் ஒரு பகுதி பறிபோய் விட்டது.

டி. எஸ். சேனநாயக்கா தொடக்கிய குடியேற்றத் திட்டங்களில் இருந்து சிங்களவர்கள் வெளியேற்றப்பட்டு விட்டனர்.

மலைநாட்டிலும் இந்த நிலை தொடங்கி விட்டது.

இப்படி சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநா

(4-ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் வீடுகட்ட லலித் தம்பி வீடு உடைப்பு!

### இப்படிக் கோஷங்கள்

சுன்னாகம், பெப். 11

குப்பிளானில் இருந்து ஆரம்பமாகிய மக்கள் பேரணியில் பல புதிய சுலோகங்கள் எழுப்பப்பட்டன.

* ''தமிழ் மக்கள் குண்டுக்கு மரணம்; லலித் தம்பி ரேகனுக்கு சரணம்''
* ''தமிழின விடுதலைக்கு மக்கள் பேரணி; தமிழ் மண் காப்பதற்கு எங்கள் பேரணி''
* ''ஜே. ஆருக்கு வெளிநாட்டுப் பந்து; எமக்கு அமெரிக்க குண்டு''
* ''தெற்கில் வீடு கட்டும் பிரதமர்; வடக்கில் வீடு உடைக்கும் லலித் தம்பி''

## சுன்னாகத்தில் மாபெரும் பேரணி

### ஆறுயிரம் பேர் கலந்து கொண்டனர்

— சுன்னாகம் செய்தியாளர் சபா. புஷ்பநாதன் —

சுன்னாகம், பெப். 11

சுன்னாகத்தில் நேற்று நடந்த பேரணியில் சுமார் ஆறுயிரம் மக்கள் கலந்து கொண்டனர்.

அரசின் அடக்குமுறைகளுக்கெதிராகவும், பாதுகாப்பு வலயத்தை நீக்குமாறும், சுன்னாகத்தில் இடம்பெற்ற பீரங்கித் தாக்குதல்களைக் கண்டித்தும் மக்கள் பேரணியும் கண்டனப் பொதுக்கூட்டமும் நடைபெற்றன.

குப்பிளான் விக்னேஸ்வர வித்தியாலயத்தில் இருந்து காலை எட்டு மணிக்கு பேரணி புறப்பட்டது.

சுன்னாகம் மயிலணி வடக்கில் பீரங்கிகளினால் குண்டுத்தாக்குதல்களினால் மரணமானவர்களின் வீட்டிலிருந்து ஆரம்பமான ஆர்ப்பாட்ட அணியுடன் முதலாவது பேர

(4ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைய இயக்குநரின் எதிர்கால நம்பிக்கை

''எங்கிருந்தாலும் வாழ்க'' படத்தின் மூலம் திரையுலகிற்கு அறிமுகமாகியவர் டைரக்டர் ஆர். செல்வராஜ்.

திரைப்படக் கல்லூரியில் டைரக்டர் கோர்ஸ் படித்தவர். சுறுசுறுப்புமிக்க இளைஞர்.

செல்வராஜ் தமது அனுபவத்தைச் சொல்கிறார்.

''பரமக்குடியிலுள்ள 'தெளிச்சா நல்லூர்' கிராமத்தில் பிறந்தேன். ஆரம்பக் கல்

தினசரி சினிமா

வியைக் கிராமத்திலேயே படித்தேன்.

அதன் பின்னர் வேலூர் கல்லூரியில் சேர்ந்து எம். ஏ. வகுப்பில் படித்தேன் இக்காலத்தில் எனது வாழ்க்கையில் பெரிய மாற்றம் நடந்தது.

திரைப்படக் கல்லூரிக்கு மனுச் செய்திருந்தேன். அதற்குச் சாதகமாக பதிலும் வந்தது. சென்னைக்கு ஓடோடி வந்தேன். கல்லூரியில் சேர்ந்தேன்.

எனது டைரக்டர் 'கோர்ஸ்' முடிந்தது. பிரபல டைரக்டர் ஆர். சி. சக்தியிடம் உதவியாளனாகச் சேர்ந்தேன்.

உண்மைகள், ஸ்பரிஸம் போன்ற படங்களில் உதவியாளனாக பணியாற்றினேன்.

சமூகச் சிந்தனையோடு படங்களை இயக்கும் ஆர். சி சக்தியுடன் தொடர்ந்து ''சிறை' படத்தில் பணியாற்றும் வாய்ப்பை இழந்தேன்.

காரணம், ''எங்கிருந்தாலும் வாழ்க'' படத்தை இயக்கும் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்ததுதான்.

''நீதியின் வெற்றி'' என்ற நாடகத்தை எழுதி, இயக்கி பரமக்குடி மக்களிடம் ஏற்கனவே நல்ல பெயர் பெற்றிருந்தேன்.

அந்த நாட்களில் ஏற்பட்ட ஆர்வமும் திரைப்படக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது படங்களை இயக்கிய அனுபவமும் தான் புதிய படத்தை இயக்கத் தூண்டுகோலாக இருந்தன.

''எங்கிருந்தாலும் வாழ்க'' படத்தில் ரகுவரன், அர்ச்சனா, அனுராதா, சாதனா போன்றோர் முழு ஒத்துழைப்பும் தந்தார்கள். இதை என்றும் மறவேன்.

திரையுலகில் புதிய அத்தியாயம் ஒன்றை ஏற்படுத்த ஆவலாய் இருக்கிறேன். பல புதுமைகளைச் செய்து நல்ல நிலைக்கு வருவேன் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு'' என்கிறார் டைரக்டர் செல்வராஜ்.

# பிலிப்பீன்ஸ் தேர்தலில் வாக்கு எண்ணல் தடங்கல்

## கொம்பியூட்டர் இயக்குவோர் வெளி நடப்பே காரணம்

மணிலா, பெப். 10

பிலிப்பீன்ஸ்தேர் தலில் வாக்குகள் எண்ணும் வேலைகள் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்குகளை எண்ணும் பணியில் கொம்பியூட்டர்களை இயக்குபவர்கள் வெளி நடப்புச் செய்ததே இதற்குக் காரணமாகும்.

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி பேர்டினன் மார்க்கோஸ் முன்னணியில் நிற்பதாக சில செய்திகள் தெரிவித்துள்ளன.

61 வீதமான வாக்குகளை மார்க்கோஸ் பெற்றுள்ளதாகவும் 49 வீதமான வாக்குகளை மட்டுமே திருமதி அக்யூனோ பெற்றுள்ளதாகவும் அந்த செய்திகளில் தெரிவிக்கப்பட்டது.

எனினும் பொதுமக்கள் புள்ளி விவரங்களைக் காட்டும் தேசிய நிறுவனமொன்று திருமதி அக்யூனோவே முன்னணியில் நிற்பதாகத் தெரிவித்திருந்தது.

இதற்கிடையே பிலிப்பீன்ஸ் தேர்தல் நடவடிக்கைகளை 13 நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள் கவனமாக அவதானித்துக் கொண்டு வருகிறார்கள்.

தில்லுமுல்லுகளுக்கும் மோசடிகளுக்கும் ஆள் மாறாட்டமும் கூடிய அளவில் அரசு தரப்பில் மேற்கொள்ளப்பட்டதாக அந்த அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் முடிவுகளை பிலிப்பீன்ஸ் தேசியசபை அதிகாரபூர்வமாக அறிவிக்குமென தேர்தல் அதிகாரிகள் ஆதாரம் காட்டி செய்திகள் தெரிவித்துள்ளன.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுவதை அடுத்து பிலிப்பீன்ஸ் பகுதிகளில் வன்முறைகள் தலைதூக்கலாம் என அபிப்பிராயங்கள் நிலவுவதாகவும் நம்பப்படுகிறது

## டர்பனில் வன்முறை

### 9 பேர் மரணம்

டர்பன், பெப். 10

தென் ஆபிரிக்காவில் டர்பனில் நடைபெற்ற வன்முறைச் சம்பவத்தில் 3 பொலிஸார் உட்பட 9 பேர் இறந்துள்ளனர்.

கூரிய ஈட்டிகள், பொல்லுகள் போன்ற ஆயுதங்கள் இந்த மோதலில் பயன்படுத்தப் பட்டதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

## அன்ரன் சகாரோவ் வெளியேற முடியாது

மாஸ்கோ, பெப். 10

ரஷ்ய விஞ்ஞானியான அன்ரன் சகாரோவ்வை நாட்டைவிட்டு வெளியே செல்ல அனுமதிக்க முடியாது.

இப்படி ரஷ்யத் தலைவர் மிக்கொலாய் கோர்பச்சேவ் அறிவித்திருக்கின்றார்.

அரசுக்கு எதிராக இயங்கியதற்காக இந்த விஞ்ஞானியை ரஷ்ய அரசாங்கம் 6 ஆண்டுகளுக்கு முன்னர் தடுப்பு முகாமுக்கு அனுப்பி இருந்தது தெரிந்ததே.

## கன்டர்பரி ஆர்ச்பிஷப்

பம்பாய், பெப். 10

சங்கிலிக்கன் திருச்சபை தலைவர் அதி வணக்கத்துக்குரிய கன்டர்பரி ஆர்ச்பிஷப் பாரதம் வந்துள்ளார்.

பரிசுத்த பாப்பரசரும் அதிவண ஆர்ச்பிஷப்பும் மதிய விருந்தொன்றில் கலந்து கொண்டனர்.

வெளி உலகில்

## மே. ஜேர்மன் அமைச்சருடன் பகத் பேச்சு

### ஆப்கான் விவகாரமும் ஆராயப்பட்டது

பொன் பெப்.10

பாரத வெளியுறவு அமைச்சர் பி. ஆர். பகத் மேற்கு ஜேர்மனியின் வெளியுறவு அமைச்சரைச் சந்தித்துள்ளார்.

பாரத அமெரிக்க திட்ட குழுக்களின் கூட்டத்துக்கு தலைவராக திரு. பகத் அமெரிக்கா சென்றிருந்தார்.

அமெரிக்காவில் தனது பணிகளை முடித்துக் கொண்டு பாரதம் திரும்பும் வழியில் அவர் ஜேர்மனிக்கும் விஜயம் மேற்கொண்டார்.

மேற்கு ஜேர்மனியில் வெளியுறவு அமைச்சருடன் பாரத ஜேர்மன் ஒத்துழைப்பு, உலகசமாதானம் மற்றும் ஆப்கானிஸ்தான் விவகாரங்கள் தொடர்பாகவும் திரு. பகத் பேச்சுநடத்தியதாகத் தெரிகிறது.

## தெ. ஆபிரிக்க ஜனாதிபதி போத்தா அமைச்சரை சாடல்

### கறுப்பர் ஜனாதிபதியாகலாம் என்று கூறியது காரணம்

கேப்ரவுண், பெப். 10

கறுப்பர் ஒருவர் ஆபிரிக்க ஜனாதிபதியாக வரலாம் என்ற கருத்தை ஆபிரிக்க ஜனாதிபதி பி. டபிள்யூ போத்தா பகிரங்கமாகச்சாடியுள்ளார்.

இந்தக்கருத்தைத் தெரிவித்தது வேறுயாருமல்ல. ஆபிரிக்க அரசின் வெளிநாட்டு அமைச்சரே இவ்வாறு கருத்துக் கூறியவர்.

இது இவ்வாறிருக்க நாட்டின் சில பகுதிகளில் கடந்த வருடம் தொடக்கம் அமுலில் அவசரகாலச் சட்டம் அரைகுறையாக நீக்கப்பட்டுள்ளது.

கலவரங்களை அடக்குவதற்கே இது தற்காலிகமாக அமுலாக்கப்பட்டிருப்பதாக காரணம் காட்டப்பட்டது.

## பாப்பரசரின் பாரத விஜயம் நேற்றுடன் நிறைவு

புதுடில்லி, பெப்.10

பரிசுத்த பாப்பரசர் ஜோன்போல் தமது பாரத விஜய நிகழ்ச்சிகளை நேற்றுடன் நிறைவு செய்துகொண்டார்.

நேற்று மாலை பூனே நகருக்கு விஜயம் மேற்கொண்டார் பாப்பரசர்.

பூனே நகரின் திறந்த வெளி அரங்கில் பல லட்சக் கணக்கான மக்கள் திரண்ட பூஜை நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொண்டார்.

## அலகபாத்தில் கீதை மாநாடு

### சங்கராச்சாரிய சுவாமிகள் துவக்கி வைத்தார்

அலகபாத், பெப். 10

மிகப்பெரிய அளவிலான கீதை மாநாடு அலகபாத்தில் நேற்று முன்தினம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

காஞ்சி காமகோடி பீட சங்கராச்சாரிய சுவாமிகள் மாநாட்டை துவக்கி வைத்தார்.

''வாழ் வாங்கு வாழும் நெறியை வகுத்துத் தந்துள்ள பொக்கிஷம், எல்லாவகைச் சிக்கல்களையும் தீர்க்கவல்ல அருமருந்து, ஞானக்கருவூலம் கீதை.''

இவ்வாறு சுவாமிகள் தமது உரையிற் குறிப்பிட்டார்.

அனைத்துலக கீதா சமாஜம் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.

பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி மாநாடு சிறப்புற நடைபெற வேண்டுமென தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## சீனத் தூதரக இராஜதந்திரிக்கு தண்டனை

நியூயோர்க், பெப்.10

சீனாவுக்கு உளவு பார்த்ததாக, ராஜதந்திரி ஒருவரை அமெரிக்க நீதிமன்றம் குற்றவாளியாகக் கண்டது.

இந்த ராஜதந்திரி அமெரிக்காவில் சீனத்தூதரகத்தில் பணியாற்றியவர்.

லிபிய விமான விவகாரம்

## உத்தரவு தவறானது என்கிறார் இஸ்ரவேல் பிரதமர்

ஜெரூசலம், பெப். 10

லிபிய ஜெட் விமானம் தரை இறக்கப்பட்டது சம்பந்தமான எனது உத்தரவு தவறானது.

இப்படி இஸ்ரவேல் பிரதமர் ஷிமொன் பெரெஸ் ஒப்புக் கொண்டார்.

அமைச்சரவையின் அனுமதியை நான் இதற்குப் பெறவில்லை. சில நிமிட அவகாசத்தில் தரையிறக்கும் உத்தரவைப் பிறப்பிக்க வேண்டியதாயிற்று. இதில் நான் பிழை செய்து விட்டேன் என்றார்.

## இலங்கையிலிருந்து சவூதி செல்பவர்களுக்கு

### எய்ட்ஸ் நோய் கட்டுப்பாடு

கொழும்பு பெப் 11

தொழில் வாய்ப்புப் பெற்று சவூதி அரேபியாவுக்குச் செல்பவர்கள் இனி 'எய்ட்ஸ்' நோயினால் பீடிக்கப்படவில்லை என்ற அத்தாட்சிப்பத்திரமும் கொண்டு போக வேண்டும். அல்லாவிடில் திருப்பி அனுப்பப்படுவார்கள்.

சவூதி அரேபியாவில் தொழில்வாய்ப்புப் பெற்றுக் கொடுக்கும் கொழும்பு ஏஜென்ஸிகளுக்கு இது சம்மந்தமான பணிப்புரையை சவூதி அரேபிய அதிகாரிகள் அனுப்பியுள்ளனர்.

கொழும்பு நகரில் உள்ள மேகநோய்த் தடுப்பு நிலையத்தில்தான் எய்ட்ஸ் நோய் சம்பந்தமானப சர்டிபிக்கட்டை (சான்றிதழ்கள்) பெற்றுக்கொள்ள முடியும். வேறு ஆஸ்பத்திரிகளில் அதைப் பெற்றுக் கொள்ளமுடியாது.

இதனிடையில்இலங்கை வெளிநாட்டமைச்சு, இந்த நிபந்தனையை இலங்கையர் விஷயத்தில் வலியுறுத்த வேண்டாம் என்று சவூதி அரேபியாவைக் கேட்டுக்கொண்டது.

சவூதி அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. 'எய்ட்ஸ், என்ற புது வகை நோய் உலக நாடுகளில் வேகமாகப் பரவி வருகின்றது தெரிந்ததே.

பாலியல் தொடர்பினால் இந்த நோய் தொற்றுகிறது.

## மந்திகையில் இரத்தம் தட்டுப்பாடு

சுண்டுக்குளி, பெப்.11

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் இரத்தம், ஒட்சிசன் ஆகியவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

கடந்த சில தினங்களாக இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக தினமும் பெருந்தொகையானோர் காயப்படுவதனாலேயேஇரத்தத்திற்கும், ஒட்சிசனுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

பொதுமக்கள் உடனடியாக இரத்ததானம் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

# இராணுவ ரோந்து அதிகரிப்பு மக்கள் நடமாட அச்சம்

## கிளிநொச்சியில் அவல நிலை தொடர்கிறது

கிளிநொச்சி. பெப் .11

கிளிநொச்சியில் இராணுவ ரோந்து நாளுக்கு நாள்அதிகரித்துவருகிறது இதனால் நகரப்பகுதி மக்கள் பெரிதும் பதற்றமும் பீதியும் அடைந்துள்ளனர். பொதுமக்கள் வெளியே நடமாட அஞ்சுகின்றனர்.

நேரகாலமின்றி இரவு பகலாக தேடுதல் நடவடிக்கையில் இராணுவம் ஈடுபட்டுவருவதால் மக்கள் எந்த நேரமும் என்ன நடக்குமோ என அஞ்சுகின்றனர்.

இராணுவ பொலீஸ் கூட்டுமுகாமுக்கு அருகில் மாவட்ட வைத்தியசாலை,கச்சேரி, விற்பனைத் திணைக்களம், கமநல சேவைத்திணைக்களம், தபால் நிலையம், விஸ்தரிப்புநிலையம் என்பன அமைந்துள்ளன.

கடந்த சில தினங்களாக இந்த அலுவலகங்களில் ஊழியர் வரவு குறைவாக இருக்கிறது.

மக்களுக்கு பிரதான சேவையாற்றவேண்டிய கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையிலேயே டாக்டர்களும் ஏனைய உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் கடமைக்கு வர அச்சம் கொண்டுள்ளனர்.

டாக்டர்கள் பலர் இடமாற்றம் பெற்றும் சென்றுள்ளனர்.

இதுதவிர முகாமுக்கு அருகேயுள்ள புதிய சந்தைக்கு வியாபாரிகளும் பொதுமக்களும் செல்வதற்கு அச்சம் கொண்டுள்ளனர்.

வியாபாரிகள் தங்கள் சில்லறை வியாபாரங்களை வீதிஓரங்களில் ஆங்காங்கே ஆரம்பித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க கிளிநொச்சி [illegible] விளையாட்டுமைதானம் இராணுவ எல்லைக்குட் படுத்தப் பட்டு தற்போது இராணுவ வீரர்களின் பயிற்சித் தளமாகவும் ஹெலிக்கொப்டர்களின் இறங்கு தரையாகவும் பாவிக்கப்பட்டு வருகிறது.

நகரப் புறப் பாடசாலைகளுக்கு மாணவர்களது வரவு மிகவும் குறைந்துள்ளது.

## திருகோணமலையில் பதற்றம் நிறைந்த பகுதிகள்

திருகோணமலை, பெப். 11

திருகோணமலை நகரில் உப்புவெளி, பத்தாம் குறிச்சி, துவரங்காடு ஆகிய பகுதிகள் பதற்றம் நிறைந்த பகுதிகள்.

அங்கிருந்து வெளியேறியவர்கள் மீண்டும் உடனடியாக குடியமர்த்தப் படமாட்டார்கள்.

இப்படி திருகோணமலை மாவட்ட இணைப்பதிகாரி பிரிகெடியர் ஹர்ஷா குணரத்ன சொன்னார்.

பிரஜைகள் குழு மற்றும் பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் அவரைச் சந்தித்தனர். அச்சமயமே இத்தகவல் வெளியிடப்பட்டது.

ஏனைய பகுதிகளில் இருந்து வெளியேறியவர்கள் மீண்டும் பழைய இடங்களில் குடியமரலாம். புனர்வாழ்வுக்கு என்று அவர்களுக்கு உதவி வழங்கப்படும்.

இப்படி அவர் கூறினார்.


நவா மினி (உஷா மினி முன்பாக)

CHURCHILL'S LEOPARDS



புதிய படபோஸ்ரர்கள் படக்கொப்பிகள் விற்பனைக்கு, வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்.


## நீத்தார் புகழாரம்

### அடலேறு 'ஆலாலு'



கடந்த 30 ஆண்டுகளாக தமிழன்னையின் துயர்துடைக்க உழைத்த அமரர் ஆ. மு. ஆலாலசுந்தரத்தின் 50 ஆவது ஜனனதினம் இன்று.

சிறுவயதில் இருந்தே பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோரின் கருத்துக்களினாலும் பேச்சுக்களினாலும் கவரப்பட்டவர் அண்ணன் ஆலாலு.

எங்கெல்லாம் தமிழன் படுகொலையோ, எங்கெல்லாம் தமிழன் விடெரிப்போ, எங்கெல்லாம் தமிழன் அகதியோ அங்கெல்லாம் ஓடி உழைத்தவர் அண்ணன் ஆலாலு.

இலங்கைத்தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து தந்தை செல்வா, கோமான் வன்னியசிங்கம், இரும்பு மனிதன் நாகநாதன் ஆகியோரை தலைவர்களாகக் கொண்டு இறுதிவரை பேச்சிலும், எழுத்திலும் செயலிலும் கொள்கை மாறாத குணக்குன்றாகத் திகழ்ந்தவர் ஆலாலு.

ஜெயவர்த்தன அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட புதிய அரசமைப்புச் சட்டத்துக்கு ஆதரவாக சத்தியப் பிரமாணம் செய்யாமல், தமது குடும்ப வருவாயைக் கூட எதிர்பாராமல் ஒவ்வொரு தமிழ் மகனுக்காகவும் அவர்தம் உரிமைகளுக்காகவும் தமது பதவியை உதறித் தள்ளியவர்களில் அண்ணன் ஆலாலுவும் ஒருவர்.

இலங்கை நாடாளுமன்றத்திலே பதவி வகித்த குறுகிய காலத்தில் ''குட்டிப்புலி'' என சிங்கள எம். பிக்களால் வர்ணிக்கப்படும்அளவுக்கு அவரது பேச்சு வீச்சும், வேகமும் — நிறைந்து காணப்பட்டது.

அவர் இன்று எம்மை விட்டுச் சென்று ஐந்து மாதமும் ஒன்பது நாட்களும் பூர்த்தியாகின்றன.

க. இரத்தினராஜசிங்கம், நல்லூர்.

வடக்கு, கிழக்கு சம்பவங்கள்:

## வெளிநாட்டு தூதரகங்களுக்கு உடனுக்குடன் தகவல்

கொழும்பு, பெப்.11

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம் பெறும் சம்பவங்கள் கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு உடனுக்குடன் அறிவிக்கப் படுகின்றன.

விடுதலைப் போராளிகளின் இயக்கங்கள் கடிதங்கள் மூலம் இதனைச் செய்கின்றன.

கொழும்பு தபால் நிலைய முத்திரைகளுடன் தான் இக்கடிதங்கள் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அனுப்பப் படுகின்றன என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.


பணிப் பெண்கள் தேவை

() குவைத்
() டுபாய்
() சிங்கப்பூர்

ஆகிய நாடுகளுக்கு பணிப்பெண்கள் தேவை.
உடன் தொடர்புகொள்ளவும்

லிப்ரூஸ் லிமிட்டெட்

R.G.கட்டடம், No. 70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
No.60, Sea Beach Road, PETTAH. Tele No. 29148

* மேற்கு ஜெர்மனி * பிரான்ஸ் * இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு எமது பிரதிநிதி உங்களை அழைத்துச் செல்வார்.
மற்றும்
ரிக்கற், பாஸ்போட், விசா, பொன்ட் என்பவற்றிற்கும் தொடர்புகொள்ளவும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

உண்மைக்காக எதையும் இழக்கலாம். ஆனால்,
உண்மையை எதற்காகவும் இழக்கக் கூடாது.
- மகாத்மா காந்திஜி.


உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 24805 22073

11-02-86 த. பெ. 23


## கேள்விக்கு என்ன பதில்?

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி மாலைதீவில் வைத்து இலங்கை இனப் பிரச்சினை குறித்துக் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

அவர் பிரதமராகப் பதவியேற்ற ஒரு வருட காலத்தில் பல வெளிநாடுகளுக்கு விஜயம் செய்து விட்டார். ஒவ்வொரு நாட்டிலும் ராஜீவ் நடத்தும் பத்திரிகையாளர் மாநாட்டில், இலங்கைப் பிரச்சினை குறித்து அவரின் கருத்தையும் போக்கையும் அறிவதற்கு செய்தியாளர்கள் துடிப்பது வழக்கம்.

அதே வகையில்தான் மாலைதீவில் நடந்த பத்திரிகையாளர் மாநாடும். ஆனால் அங்கு வைத்து இந்தியப் பிரதமர் வெளியிட்ட கருத்துக்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. இலங்கைத் தமிழர் பிரச்சினையின் எதிர்காலத்தை நிர்ணயிக்கக் கூடியவை.

இலங்கைத் தமிழர் பிரச்சினையை தீர்த்து வைப்பதில் இந்தியா தலையிட வேண்டிய அவசியமும் அவசரமும் ஒரு கட்டத்தில் ஏற்பட்டது. விரும்பியோ விரும்பாமலோ ஒரு மத்தியஸ்தனாகவும் உதவியாளனாகவும் பங்காற்ற வேண்டிய தேவை உருவானது. இந்தியாவின் மத்தியஸ்தத்தையும், உதவியையும் இலங்கை அரசாங்கமும் ஏற்றுக் கொண்டது.

ஆனால் சொல்வது ஒன்று செய்வது வேறொன்று. முன்னர் கூறியதற்கு முரணாகப் பின்னர் சொல்வது. பிரச்சினையைத் தீர்ப்பதில் உரிய அக்கறை காட்டாமல் பாசாங்கு செய்து காலத்தைக் கடத்துவது.

இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதே இலங்கை அரசின் இயல்பாகி விட்டது. இவற்றைத் தெரிந்தும் தெரியாததும் போல, இந்தியா கடந்த இரண்டு வருடங்களாக பார்த்துக் கொண்டே இருந்தது.

இந்தியா சென்றுள்ள இலங்கை அகதிகள் கௌரவமாகத் தாயகம் திரும்ப வழி ஏற்படும் வரை மலையகத் தமிழருக்கு இந்தியக் குடியுரிமை வழங்கமாட்டோம். இவ்வாறு திரு. ராஜீவ் காந்தி சுமார் ஆறு வாரங்களுக்கு முன் கூறியிருந்தார். அப்போது இந்தியாவின் போக்கில், திரு. ராஜீவ் பிரதமரான பின்னர் பெரிய திருப்பம் ஒன்று ஏற்பட்டது.

அந்தத் திருப்பத்தின் விளைவாக உருவான முக்கிய முனையாக மாலைதீவில் தெரிவிக்கப் பட்ட கருத்து அமைந்துள்ளது.

இலங்கை இனப் பிரச்சினையை நியாயமான முறையில் தீர்த்து வைக்க நாம் விரும்புகிறோம். இலங்கையின் ஜெயவர்த்தன அரசுக்கு எமது முயற்சிகளில் அக்கறை-ஆர்வம் இல்லையானால் அதனை எம்மிடம் நேரடியாகச் சொல்ல வேண்டும்.

இந்தக் கர்ச்சனை - கருத்து மிகவும் காத்திரமானது. இலங்கையின் கண்ணாமூச்சி விளையாட்டைத் தானும் உணர்ந்து விட்டார் என்பதை ராஜீவ் வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார்.

ஒருவரின் மத்தியஸ்தத்தை அல்லது உதவியை நாடிப் பிரச்சினையைத் தீர்க்க விரும்பியவருக்கு, அந்த மத்தியஸ்தரை மதிக்கத் தெரிய வேண்டும். அவரது போக்கில் விருப்பம் இல்லையெனில் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகச் சொல்லி அவரை அந்த அந்தஸ்திலிருந்து அகற்றிவிட வேண்டும்.

இரண்டையும் செய்யாமல் விடுவது எப்படி நியாயமாகும்? அல்லது தர்மமாகும்.

ராஜீவின் இந்தக் கேள்விக்குப் பதில் அளிப்பது இலங்கையின் கடமை மத்தியஸ்தம் வேண்டுமா, வேண்டாமா? வழுவாடித்தனம் வேண்டாமே!

ராஜீவுக்குப் பதிலளிக்கும் போது இனப் பிரச்சினைக்கு இலங்கை அரசாங்கம் மனதார விரும்புவது அரசியல் தீர்வா அல்லது இராணுவத் தீர்வா என்பதும் வெளிச்சத்துக்கு வந்து விடும்.

## சங்கானை அரசினர் ஆஸ்பத்திரி குறைபாடுகள்

யாழ்ப்பாணம், பெப். 11

சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியின் குறைபாடுகள் குறித்து சுகாதார வைத்திய அத்தியட்சகரிடம் முறையிடப் பட்டது.

சுகாதார வைத்திய அத்தியட்சகர் அண்மையில் சங்கானை ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்தார்.

ஆஸ்பத்திரியின் குறைபாடுகளை அத்தியட்சகர் கேட்டுத்தெரிந்து கொண்டார்.

ஆஸ்பத்திரி வார்டில் தங்கும் நோயாளிகள் வெய்யில், மழையினால் பாதிக்கப்படுகின்றனர்.

ஆஸ்பத்திரியைச் சுற்றி பாதுகாப்பைப் பலப்படுத்த வேலி அமைக்க வேண்டும். மருந்துத்தட்டுப்பாடு ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும்-

இப்படி சமூகத் தொண்டர் திரு க. ச. கந்தசாமி வைத்திய அத்தியட்சகரைக் கேட்டுக் கொண்டார்.

# ஹிட்லர் ஆட்சியிலே நடக்காத அட்டூழியங்கள் தமிழ் பகுதியில்

## கூலிப்படைகளால் தமிழ் மக்களின் உயிர் வாழும் உரிமை பறிப்பு

**இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் இன்றைய அவல நிலையை துல்லியமாக எடுத்துக் காட்டும் அறிக்கை ஒன்றை நவலங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர்விக்கிரமபாகு கருணரத்னவும் அமைப்புச் செயலாளர் திரு. வாசுதேவ நாணயக்காராவும் வெளியிட்டுள்ளனர்.**

**அந்த அறிக்கையின் சுருக்கம் நேற்றைய உதயனில் பிரசுரமாகி இருந்தது. அறிக்கையின் முழுவிவரத்தையும் கீழே காணலாம்**

1977இல் யு. என். பி அரசு பதவிக்கு வந்ததன் பின்னர் தமிழ் பேசும் மக்கள் மிக மோசமான இனவெறித் தாக்குதல்களுக்கு ஆளாகி வந்துள்ளனர்.

தமிழரின் குறைபாடுகளுக்கு நிவாரணம்காணப்போவதாக 1977 தேர்தல் விஞ்ஞாபனத்தில் யு.என்.பி கூறியிருந்தது.

ஆனால் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போன்று பதவிக்கு வந்த இரண்டு மாதங்களிலே இனக்கலவரம் ஒன்றுக்குத் தூபம் போட்டது யு.என்.பி.

அதைத் தொடர்ந்து இடம்பெற்று வந்த தமிழருக்கு எதிரான தாக்குதல்கள், இராணுவத் தாக்குதல்கள் இறுதியில் 1983 ஜூலை கலவரத்தில் வந்து முடிந்தன.

1981இல் ஆயுதப் படையினர் நடத்திய அழிவு, அக்கிரமங்களைத் தொடர்ந்து நாம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தோம்.

அப்போது நாங்கள் கீழ்க்கண்டவற்றை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

● சிங்களப் பகுதியில் வன்செயல்களால் பாதிக்கப்பட்டு வடக்கு, கிழக்குக்கு வந்த தமிழர் கூட இன்று சொந்தப் பூமியிலும் பாதுகாப்பு இன்றி வாழ்கிறார்கள்.

● ஹிட்லர் ஆட்சியில் கூட நடக்காத அட்டூழியங்கள் இன்றுதமிழ்ப் பகுதிகளில் இடம் பெறுகின்றன. உதாரணம்; நூல் நிலையங்களை எரிப்பது, கலாசாரநிலையங்களை எரித்தது.

தமிழர் பின்வாங்குவதை விட்டு எழுந்து நின்று போராட வேண்டும்.

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அட்டூழியங்கள் கீழ்த்தரமானவை மட்டுமல்ல; பைத்தியக்காரத் தனமானவையுங் கூட.

மனித உயிர்கள்,உடைமைகள் ஈவிரக்கமின்றி அழிக்கப்படுகின்றன. கொள்ளையிலும் வெட்கக்கேடான முறையில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

அரசினால் காப்பாற்றப் படவேண்டிய அப்பாவி மக்கள் அந்த அரசினாலேயே கேட்பாரற்ற முறையில் கொல்லப்படுகிறார்கள்.

அப்படிச் செய்து கொண்டு, ஆட்சியையும் அதிகாரங்களையும் மதிக்கும்படி தமிழ் மக்களைக் கேட்க அரசாங்கத்துக்கு என்ன உரிமை உண்டு?

கண்காணிப்பு வலயம், பாதுகாப்பு வலயம் போன்றவைகளால் மேலும் துன்பங்கள் தமிழர்களுக்கு இழைக்கப் படுகின்றன.

ஊர்காவற்றுறை,பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, மாதகல், கிளிநொச்சி, மூதூர், திருகோணமலை, நெடுங்கேணி, வவுனியா, ஏறாவூர், செங்கலடி, உயிலங்குளம் உட்பட இன்னும் பல இடங்கள் படுமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, மாதகல் மற்றும் பல இடங்கள் கடற்படையின் பீரங்கித் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளன.

சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தைக் கொண்டு தமிழினத்தை அழிக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதா என்று கூட கருத வேண்டியுள்ளது.

சிங்கள ஏழைவிவசாயிகள், தொழிலாளிகளின் பிள்ளைகளைக் கொண்ட கூலிப்பட்டாளத்தை இனவெறி கொண்ட அதிகாரிகளே வழிநடத்துகிறார்கள்.

**பாதுகாப்புவலயம்**

கடைசியாக வந்துள்ளது இப்பாதுகாப்பு வலயப் பிரகடனம்.

இது எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போன்ற செயலாகும்.

பாதுகாப்பு வலயத்தினுள் குடிமக்கள் ஆயுதப் படையினரால் கொல்லப்பட்டால், அதற்கு அரசு பொறுப்பு அல்ல என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

'தர்மிஷ்ட' அரசாங்கம் மனித உரிமைக்குக் கொடுக்கும் மதிப்புத் தான் இது.

1983 ஜூலை வன்செயலில் கொல்லப்பட்ட தமிழர்களை விட, ஏராளமானோர் அதன் பின்னர் கொல்லப்பட்டுள்ளனர்.

அண்மைக்கால அறிக்கையின்படி, வயது-பால்வித்தியாசம் இன்றி 4,000க்கு குறைவில்லாத தமிழர் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்களில் 2,000 பேர் வரையில் குடும்பத் தலைவர்கள்.

இதனிடையில் இனவாத அரசாங்கம், வேலையற்ற சிங்கள இளைஞர்களின் உயிர்களைத் தியாகம் செய்ய வைக்கிறது.

மக்களின் விருப்பத்துக்கு மாறாக குடியிருப்புப் பகுதிகளில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அம் முகாம்களில் உள்ள இராணுவ வீரர்களுக்கு கொடூரமான அதிகாரங்கள் பல வழங்கப்பட்டுள்ளன.

இது தமிழ் மக்களின் உயிர் வாழும் உரிமையைப் பறிப்பதாக உள்ளது.

யாழ் கோட்டை இராணுவ முகாம், யாழ் பட்டினத்தின் மத்தியில் அமைந்துள்ளது,

அரச, தனியார் அலுவலகங்கள், ஆஸ்பத்திரிகள் எல்லாம் யாழ் நகரில் உள்ளன.

எப்படி யாழ் மக்கள் பயமின்றி தங்கள் அன்றாடக் கருமங்களைச் செய்ய முடியும்?

வீண் விரயத்தையும் எதிர் விளைவுகளையும் தரவல்லது இந்த யுத்ததந்திரம் என்பது அரசாங்கத்துக்குத் தெரியாதா?

ஆறுமாதங்களில் பயங்கரவாதத்தை அதன் சகல அம்சங்களுடன் அழித்து விடுவதாக உறுதிபூண்டு பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்காவை 1979 இல் இந்த அரசாங்கம் அனுப்பியது.

அரசின் அந்த நடவடிக்கைதான், ஆறு வருடங்களின் பின்னர் தமிழ் போராளிகளின் எண்ணிக்கையை பல மடங்காக அதிகரிக்கவைத்தது என்பது தெரியவில்லையா?

ஈழம் கோரிக்கை வலுப்பெறவும் விடுதலைப் போராளிகளின் இராணுவ நடவடிக்கைகள் அதிகரிக்கவும் இந்த அரசாங்கம்தானே பொறுப்பு!

பின்னர் ஏன் இந்த அரசாங்கம் 700 கோடி ரூபா செலவில் இந்த இராணுவ சாகசத்தை நடத்தி, இருக்கும் பொருளாதார நெருக்கடியை அதிகரிக்க வைக்கவேண்டும்?

இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்ற விருப்பம், ஆற்றல் இந்த அரசுக்கு இருப்பின் தமிழ்ப்பகுதிகளில் இருந்து ஆயுதப் படையினரை வாபஸ் வாங்குவதே நல்ல வழியாகும்.

● தமிழ்ப் பகுதிகளில் இருந்து ஆயுதப்படையினர் வாபஸ்பெறப்பட வேண்டும்.

● இராணுவத் தீர்வு என்ற பயனற்ற முயற்சியை இலங்கை அரசு கைவிட வேண்டும்.

தீர்வை விரும்பும் சகல அமைப்புக்களும் மேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் போராட்டம் ஒன்றை நடத்த முன்வர வேண்டும்.

## இருவர் அடையாளம் காணப்பட்டனர்

கிளிநொச்சி, பெப். 11

இம்மாதம் ஐந்தாம் திகதி (புதன்கிழமை) பரந்தன் பகுதியில் ராணுவம் சுட்டதில் பலியான மூவரில் இருவர் அடையாளம் காணப்பட்டனர்.

புதன் அதிகாலை நடைபெற்ற சம்பவத்தில் கொல்லப்பட்ட இராமநாதன் மகேந்திரன் என்பவரே அடையாளம் காணப்பட்டவர். விவசாயியான இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை.

இவரது மரண விசாரணையை கிளிநொச்சி கிராமசேவகர் எஸ். தனபாலசிங்கம் மேற்கொண்டார். பிரேத பரிசோதனையை சட்ட வைத்திய அதிகாரி எஸ். வேல்முருகையா மேற்கொண்டார்.

நண்பகல் இடம்பெற்ற சம்பவத்தில் கொல்லப்பட்ட மாணிக்கம் ஆனந்தமுத்து என்பவரது சடலமும் அடையாளம் காணப்பட்டது சிவல்தொழிலாளியான இவருக்கு மூன்று பிள்ளைகள்.

... மாணவராகு... சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

## உதயனின் வார இதழ் சஞ்சீவி

## அரிசி ஆலையில் கொள்ளை

யாழ்ப்பாணம், பெப். 11

கிளிநொச்சி பகுதியில் உருத்திரபுர வீதியில் அமைந்துள்ள அரிசிஆலை ஒன்றிற்குள் புகுந்த இனம் தெரியாதவர்கள் 10 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் உட்பட 25ஆயிரம்ரூபா பெறுமதியான பொருள்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

### பொய்யாமொழி



குறள்:

அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு.

பொருள்:

அருமையான உயிர்க்கு உடம்போடு பொருந்தியிருக்கின்ற உறவு, அன்போடு பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்று கூறுவர்.

## ஆசிரியர்களுக்கு 2 நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப்.11

கோப்பாய், உடுப்பிட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி கல்வி வட்டாரங்களில் ஜி.சி.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு பொருளியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் கருத்தரங்கு இன்றும் (செவ்வாய்) நாளையும் (புதன்) புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி வளவில் அமைந்துள்ள கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலைய விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா தலைமை வகிப்பார்.

இன்றைய கருத்தரங்கில் யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிவியாம்பிள்ளை ஆரம்ப உரை நிகழ்த்துவார்.

யாழ் பல்கலைக்கழக பொருளியற்றுறைத் தலைவர் கலாநிதி வி. நித்தியானந்தன் "அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பொருளாதாரப் பிரச்சினைகளும் இலங்கையும்" என்னும் தலைப்பிலும் பொருளியற்றுறை விரிவுரையாளர் திரு. வி.பி. சிவநாதன் "பொருளாதாரக் கோட்பாடுகள் பற்றிய அறிமுகம்" என்ற தலைப்பிலும் கருத்துரை வழங்குவர்.

நாளைய கருத்தரங்கில் யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி திரு. என். பாலகிருஷ்ணன் "தேசிய உற்பத்தியும் வருமானமும்" என்ற தலைப்பிலும் பொருளியற்றுறை விரிவுரையாளர் திரு. என். பேரின்பநாதன் "வெளிநாட்டு வர்த்தகமும் வெளிநாட்டு உதவியும்" என்ற தலைப்பிலும் பொருளியற்றுறை விரிவுரையாளர் திரு. கே. கந்தையா "பொருளாதாரத்தில் பணத்தின் பங்கு" என்ற தலைப்பிலும் கருத்துரை வழங்குவார்.

### வாசகர் திருமுகம்

## தீவுப்பகுதி பிரயாணம் மரணப் பொறியில் ...

தீவுப் பகுதிக்கான போக்குவரத்து - மரணப் போராட்டம் நிறைந்ததில் பிரயாணமாக மாறி வருகின்றது.

பண்ணைப் பாலத்தைத் தாண்டாமல் வேறெந்தப் பாதையாலும் தீவுப்பகுதிக்குப் பிரயாணத்தை மேற்கொள்ள முடியாது.

மாற்று வழி எதுவும் இல்லாத காரணத்தினால் "அழுதும் பிள்ளை அவளே பெறவேண்டும்" என்பது போல என்னதான் உயிர் ஆபத்து நிகழ்ந்தாலும் பண்ணைப் பாதையால்தான் தீவுப்பகுதிக்கான பயணத்தை மேற்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலை நிலவுகிறது.

அப்பாதையால் பிரயாணத்தை மேற்கொள்ளும் போது மரணப்பொறியை தாண்டுவது போன்ற உணர்வோடுதான் மக்கள் பிரயாணத்தை மேற்கொள்கின்றனர்.

உயர் அரசாங்க அதிகாரிகளுக்கே உயிர் ஆபத்து நிகழ்ந்துள்ள போது, சாதாரண அப்பாவி மக்கள் பயப்படாமல் இருக்க முடியுமா?

நயினை
நா. கோபாலகிருஷ்ணர்
திவ்ய ஜீவன சங்கம்.

## ஜீ. ஜீயின் சாதனைகள்

— திருமதி நவராணி கணேசராஜா —

(அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் 9 ஆவது நினைவுதினம் கடந்த ஞாயிறன்று அனுஷ்டிக்கப்பட்டது. அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.)

ஈழத்தமிழர் சமுதாயம் கும்பகர்ணனது நிலையில் இருந்த வேளையில் ஜீ.ஜீ. என்ற இளைஞர் தோன்றினார். ஜீ.ஜீயின் அழுத்தமான கால்கள் பட்ட காரணத்தினாலே தான் கும்பகர்ணனது நிலையிலிருந்த தமிழர் சமுதாயம் விழித்துக் கொண்டது.

ஜீ ஜீ. அவர்கள் தமிழர் சமுதாயத்துக்குத் தேவையான, சமுதாயத்தை வளர வைக்கக் கூடிய, ,விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய செயல்களில் இறங்கினார் சிங்கநாதம் செய்தார். தமிழனுடைய பெருமையையும் வலிமையையும் தொன்மையையும் தமிழ் மக்கள் மறந்திருந்த நேரத்தில் 1947 இல்,

"தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்று பள்ளி எழுச்சி பாடி தமிழ் மக்களின் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பினார்.

அவர் அரசியலுக்கு வந்ததும் - சட்டத்துறைக்கு வந்ததும் -தமிழன் உயர்ந்தான் தமிழ் உயர்ந்தது; தமிழர்களின் வரலாறு உயர்ந்தது: தமிழனின் தன்மானப்பற்று உயர்ந்தது.

ஜீ ஜீ. தன் காலத்தில் தமிழரின் உயர்வுக்காக பற்பல திட்டங்களை நிறைவேற்றினார்.

• காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை.

• பரந்தன் கொஸ்றிக்சோடா இரசாயனத் தொழிற்சாலை.

• வாழைச்சேனையில் கடதாசித் தொழிற்சாலை

• இரணைமடு நீர்ப்பாசனத் திட்டம் நிறைவேற்றப்பட்டது

• மன்னார், யாழ்ப்பாணத்தில் பனிக்கட்டித் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன.

* கைதடியில் வயோதிபர் மடம் ஸ்தாபிக்கப் பட்டது.

* தமிழ், முஸ்லிம் மக்களைக் குறிக்க இலங்கை தேசியக் கொடியில் கௌரவமான இடங்கள் முதன் முதல் கொடுக்கப்பட்டன.

* யாழ்ப்பாண ஆஸ்பத்திரி 1 கால் லட்ச ரூபா செலவில் விஸ்தரிக்கப்பட்டு நவீன சிகிச்சை வசதிகள் ஏற்படுத்தி இலங்கையில் முதல்தர ஆஸ்பத்திரிகளில் ஒன்றாக்கப் பட்டது.

* யாழ்நகர் வாசிகளுக்குக் குழாய் மூலம் சுத்தமான குடி தண்ணீர் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

* பொற்றொழிலாளர்களுக்குப் பவுண் குறைந்த விலையில் வழங்கப்பட்டது.

* கடற்றொழிலாளர்கள் நவீன இயந்திரப் படகுகள் மூலம் மீன் பிடிப்பதற்கு பயிற்சியளிக்கப்பட்டது.

* நாடாளுமன்றத்தில் பிரதிநிதிகள் தமிழில் சொற்பொழிவு செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன. முதன் முதல் பாராளுமன்றத்தில் தமிழில் சொற்பொழிவாற்றிய பெருமை ஜீ. ஜீ. யையே சாரும்.

இச்செயல்களினால் அன்று ஈழத்தமிழர் நெஞ்சங்களில் நிறைந்த ஜீ. ஜீ. மறைந்து 9 ஆண்டுகள் சென்றாலும் இன்றும் அவரவர் நெஞ்சங்களில் அணையா ஜோதியாக இருக்கிறார்.

அவர் என்றும் இவ்வாறு ஈழமக்கள் நெஞ்சங்களில் இருப்பார் என்பதற்கு ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வட மாகாணத்திலே
பல்லாண்டு கால தனிச்சிறப்புச் சேவை
SUNLIGHT
DRY CLEANERS
(Opp. Bus Stand)
JAFFNA.

# உதயன்

11 . 02 . 1986

தரமான
போட்டோஸ்டாட் பிரதி
உடனுக்குடன் தெளிவாகப்
பெற்றுக்கொள்ள
SUNLIGHT
DRY CLEANERS
(பஸ் நிலைய முன்பாக)
யாழ்ப்பாணம்.

# கிளிநொச்சியில்

## சிறுபோகம் பாதிப்பு

## அடையும் அபாயம்

### குண்டு வெடிப்பினால் குளம் வற்றியது

கிளிநொச்சி,பெப்,11 கிளிநொச்சிக் குள நீர்ப் போக்கி குண்டு வைத்து தகர்க்கப்பட்டதால் குளம் வற்றிவிட்டது

கடந்தவாரம் கிளிநொச்சியிலிருந்து கனரக வாகனங்கள் சகிதம் இராணுவத்தினர் கல்மடுப் பகுதிக்குச் செல்ல இவ் வீதியூடாக பயணம் சென்றபோது இந்த நீர்ப் போக்கி குண்டு வைத்து தகர்க்கப்பட்டது தெரிந்ததே.

இதனால் இராணுவம் தனது பயணத்தை நிறுத்தி முகாமுக்குத் திரும்பியது இக்குண்டு வெடிப்பினால் நீர்ப்போக்கியும் வட்டக்கச்சி கிளிநொச்சி பிரதான வீதியும் சேதமுற்றன. வாகனப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டன. மின்சாரமும் துண்டிக்கப்பட்டது.

கிளிநொச்சிக் குளம் வற்றி விட்டதால் அதிலிருந்து நீர்ப்பாய்ச்சல் மூலம் சிறுபோக நெற் சாகுபடி செய்யப்படும் பல ஏக்கர் காணியில் இவ் வருடம் நெல் பயிரிட முடியாது என விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

குடியுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன்

## மலையகத்தில் சிங்கள மக்கள் அகதிகளாக்கப்பட்டு விட்டனர்

— அனுரா

கொழும்பு, பெப் 11 மலையகத் தமிழருக்குக் குடியுரிமை வழங்கும் சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட உடனேயே மலையகத்தில் சிங்களவர் அகதிகளாக்கப்பட்டு விட்டனர் இதற்கு அரசாங்கம் தான் பொறுப்பு ஏற்கவேண்டும்.

இப்படி எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா சொன்னார்.

வன்செயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை திரு. அனுரா பண்டாரநாயக்கா நேற்றுப் பார்வையிட்டார்.

நுவரெலியா, சிறிபுர, ஆரியபுர, டிக்கோயா, பொகவந்தலாவ ஆகிய பகுதிகளில் சிங்கள மக்களுக்கு ஏற்பட்ட சேதங்களையும் பார்வையிட்டார்.

டிக்கோயாவில் சேதமடைந்த சுமணராம விகாரையையும் திரு. அனுரா பண்டாரநாயக்கா பார்வையிட்டார்.

## கிராம சேவகர் பிரிவுகளில் மக்கள் அவை வேண்டும்

சுண்டுக்குளி, பெப். 11 யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 151 கிராம சேவகர் பிரிவுகளிலும் விரைவில் மக்கள் அவையை உருவாக்க வேண்டும்.

இவ்வாறு மக்கள் அவையின் ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றிய அவையின் செயலாளர் ச. செந்தூர்ராசா கோரிக்கை விடுத்தார்.

ஞாயிறு யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மக்கள் அவையின் செயற்பாடு பற்றிய அறிக்கையை அவர் சமர்ப்பித்து உரையாற்றினார்,

கரவெட்டி, பருத்தித்துறை, கோப்பாய் ஆகிய மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் ஏற்கெனவே மக்கள் அவைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவை பிரஜைகள் குழுக்களுடன் இணைந்து செயற்படும்.

மக்கள் அவை குடாநாடு எங்கும் விஸ்தரிக்கப்பட்ட பின்னர் கையெழுத்தியக்கம் போன்றதொரு போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

சுமார் 200 பேர்வரை கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் மக்கள் அவையின் விஸ்தரிப்புப் பற்றி ஆராயப்பட்டது.

## தொலைத் தொடர்பு இல்லாக் குறையை நீக்க ரெலி குளோப்

### திறப்பு விழாவில் உரை

நல்லூர், பெப். 11 இன்று தமிழ் மக்கள் பல இன்னல்களை அனுபவித்து வருகிறார்கள். யாழ்ப்பாணத்துக்கும் வேறு பகுதிகளுக்கும் இடையில் தொலைத் தொடர்புகள் அற்று வருகின்றன.

இவற்றை நிவர்த்தி செய்யும் பொருட்டு இன்று இந்த ரெலி குளோப் நிறுவனத்தை திறந்து வைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

நேற்று யாழ்-ஸ்ரான்லி வீதியில் உள்ள "ரெலி குளோப்" தனியார் தொலைத் தொடர்பு நிலையத்தை மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்துகையில் உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் இப்படி தெரிவித்தார்.

யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம், வட பிராந்திய தொலைத்தொடர்பு பொறியியலாளர் திரு. த. அம்பிகைராஜா, சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா ஆகியோரும் மங்கல விளக்கேற்றி வைபவத்தில் உரை நிகழ்த்தினார்கள்.

ரெலிகுளோப் உரிமையாளர் திரு. எம். சிவராசா நன்றியுரை கூறினார்.

நீம் சுகாதார தூபம்

நுளம்பு, இலையான் தொல்லைகளை நீக்கி, வீடுகளுக்கு புனிதத் தன்மையையும் ஆரோக்கியத்தையும் தருகின்றது. ஒரு பைக்கற் 50 சதம் மட்டுமே. மில்க்வைற், யாழ்ப்பாணம்.

### விடுதலை இயக்கங்களுக்கு ஓர் உருக்கமான வேண்டுகோள்

வெள்ளிக்கிழமை மாலை சாவகச்சேரிக்கும் கைதடிக்கும் இடையில் எமது லொறி கடத்தப்பட்டது. யாழ் குடாநாட்டைச் சேர்ந்த – வெளிநாட்டில் பலகாலம் கஷ்டப்பட்டு உழைத்த - மக்களின் பல பொருள்கள் அதில் இருந்தன.

இந்தப் பொருள்களை மீட்டுத் தருமாறு விடுதலை இயக்கங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

சேவ்றி டிரான்ஸ்போட்டேர்ஸ்
யாழ்ப்பாணம்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 11 . 2 . 1986

## தேங்காய் எண்ணெய் தொழிற்சாலை தீக்கிரை

### தீயில் அகப்பட்டு ஒருவர் மரணம்

கொழும்பு, பெப். 11 பேலியகொடையில் தேங்காய் எண்ணெய்த் தொழிற்சாலை ஒன்று நேற்று அதிகாலை தீக்கிரையானது.

ஒரு தொழிலாளி நெருப்புக்குள் அகப்பட்டு மரணமானார்.

தீ விபத்தால் அந்த ஆலைக்கு 4 கோடி ரூபா வரையில் நஷ்டம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

முஸ்லிம் வர்த்தகருக்குச் சொந்தமானது இந்த ஆலை. நெருப்புக்குள் அகப்பட்டு இறந்தவரும் ஒரு முஸ்லிம்.

எண்ணெய்த் தகரம் ஒன்று வெடித்ததனால் இத்தீவிபத்து ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

## மகாபொல பரிசில்; மாணவர்க்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப். 11 மகாபொல புலமைப் பரிசில் பெறுவதற்காக கட்டுகம்பொலைக்குச் செல்லும் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் அங்கிருந்து திரும்பி வருவதற்கான ரயில் டிக்கெட்டுகளையும் யாழ் ரயில் நிலையத்திலேயே பெற்றுக் கொள்ள வேண்டும்.

பல்கலைக்கழக மாணவர் அவையின் ஏற்பாட்டில் கட்டுகம்பொலைக்குச் செல்லும் மாணவர்களிடம், மாணவர் அவை இப்படிக் கோரிக்கை விடுத்திருக்கிறது.

ரயில் டிக்கெட்டுகளை மாணவர்கள் தனித்தனியாகப் பெற்றுக்கொள்ளாமல் – ரயில்வே பணியாளர்களின் நலன் கருதி –ஐந்து மாணவர்கள் ஒன்றுகூடி ஒரே டிக்கெட்டாகப் பெற்றுக் கொள்ளும்படியும் அவை கேட்டிருக்கிறது

எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு – யாழ்ப்பாணம் யாழ்தேவியில் பிரயாணம் செய்யக் கூடியதாக மாணவர்கள் டிக்கெட்டுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மாணவர்களின் பிரயாணம், தங்குமிட வசதிகள் தொடர்பான அறிவித்தல் இன்று நடைபெறும் விளக்கக் கூட்டத்தில் மாணவர்களுக்கு நேரடியாகத் தெரிவிக்கப்படும் என அவை மேலும் தெரிவித்திருக்கிறது.

தங்குமிடவசதி, பிரயாணவசதி என்பவற்றை ஒழுங்கு செய்து தரும்படி மாணவர் அவைக்கு விண்ணப்பித்த மாணவர்களே இவ்விளக்கக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

கட்டுகம்பொலை பன்னல மகா வித்தியாலயத்தில் மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்ச்சி இடம்பெறும்.

புலமைப் பரிசில் பெறும் மாணவர் தொகை 386 இவர்களில் 252 பேரே பிரயாண ஒழுங்கு செய்து தருமாறு கேட்டுள்ளனர்.

முற்போக்கு எழுத்தாளர் அணி

## சமகாலப் பிரச்சினைகளில் உறுதியான நிலைப்பாடுடையது

### 'மல்லிகை' டொமினிக் விளக்கம்

யாழ்ப்பாணம்,பெப்.11 முற்போக்கு எழுத்தாளர்அணி சமகாலப் பிரச்சினைகள் பற்றி உறுதியான நிலைப்பாடு உடையது. சிங்களமக்கள் மத்தியில் உள்ள நேசசக்திகளை திரட்டும் முயற்சிகளை மேற்கொண்டது இதுவே அதன் அணுகுமுறை.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ் கிளையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இலக்கியக் கருத்தரங்கில் பேசுகையில் மல்லிகை ஆசிரியர் திரு டொமினிக் ஜீவா இவ்வாறு கூறினார். திரு.எஸ். சோமகாந்தன் தலைமை வகித்தார்.

"சமகாலமும் இலக்கியமும்" என்ற பொருளில் உரையாற்றிய திரு டொமினிக் ஜீவா தொடர்ந்து கூறியதாவது:-

இலங்கையில் கொழும்பு தவிர வேறெந்த மாவட்டத்தில் இருந்தும் தினசரிகள் பிரசுரமாகாத சூழ்நிலையில், யாழ்ப்பாணத்தில் இருந்து மூன்று தமிழ்தினசரிகள் வெளிவருவது வரவேற்கத்தக்கது. இவ் வாசிப்புத்தன்மை இலக்கியத்துக்கும்இலக்கியசஞ்சிகைகளுக்கும் பயன்பட வேண்டும்.

சிங்களமக்கள்மத்தியில் வாழும் முஸ்லிம்இளைஞர்கள்நல்ல இலக்கியபடைப்புகளை உருவாக்குகின்[illegible] கள் படிப்பு, கருத்துப்பரிவர்த்தனை ஆகிய அடிப்படை வாய்ப்புகள் போதிய அளவு இல்லாத முஸ்லிம் யுவதிகள் கூட ஈழத்து தமிழ் இலக்கியத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களான செ. கணேசலிங்கன்,காவலூர் ஜெகநாதன் ஆகியோர் தமிழகத்தில் பதிப்பகம் அமைத்துள்ளமையும் வரவேற்கத்தக்கது.

ஒடுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு இருந்த மட்டங்களிலிருந்து நல்ல தமிழ் எழுத்தாளர்கள் நம்மத்தியில் உருவாகி இருக்கிறார்கள். இது தமிழ் நாட்டில் கூடக் காண முடியாத நல்ல சாதனை.

அகஸ்தியர், நீர்வை பொன்னையன், கலாநிதி. எஸ்.கிருஷ்ணராசா, கலாநிதிசபா ஜெயராசா, 'ஈழமுரசு' ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம், "அமிர்தகங்கை" ஆசிரியர் திரு. செம்பியன் செல்வன் ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

அமைப்புச் செயலாளர் திரு. ஐ. சாந்தன் நன்றியுரை கூறினர்.

## நீலன் -- முஸ்லிம் குழு சந்திப்பு

மட்டக்களப்பு,பெப்.11 கிழக்கு இலங்கை முஸ்லிம்களின் தூதுக்குழு இன்று (செவ்வாய்) தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகரும் வட்டுக்கோட்டை தொகுதியின் முன்னாள் உறுப்பினருமான டாக்டர் நீலன் திருச்செல்வத்தை சந்திக்கிறது

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து முஸ்லிம் பிரதிநிதிகள் டாக்டர் நீலன் திருச்செல்வத்திடம் எடுத்துரைக்க இருப்பதாகத் தெரிகிறது

### புதிய...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

செல்லக்கூடியதாக இருக்கும் என்று திரு. [illegible] இலங்கைத் தலைவர்களி[illegible] கக் கூறிவிட்டார் என்று தெரியவருகிறது.

# விளையாட்டரங்கு

கூடைப்பந்தாட்டம்

## பல்கலைக்கழகம் தோல்வி!

### இறுதியாட்டத்திற்கு சென். ஜோன்ஸ், வை.எம்.சி.ஏ.

— விளையாட்டுச் செய்தியாளர்:- சண். ஜோன்சன் —

யாழ்ப்பாணம்,பெப் 11 யாழ்ப்பாணம் கிறிஸ்தவ இளைஞர் மன்றம் (வை. எம்.சி.ஏ.) நடத்தும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்திற்கு சென்ஜோன்ஸ் கல்லூரி அணி, யாழ்ப்பாணம்வை.எம்.சி ஏ.அணி ஆகியவை தெரிவாகின.

நேற்று நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் சென். ஜோன்ஸ் அணி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியை 35-26 என்ற புள்ளியடிப்படையில் தோற்கடித்தது.

சென். ஜோன்ஸ் அணியின் தரப்பில் பி.பார்த்திபன் 15 புள்ளிகளையும்,சி. என்.கனகராஜா 10 புள்ளிகளையும், பல்கலைக்கழக அணியின் தரப்பில் எம். எம். ஜபார் 10 புள்ளிகளையும் பெற்றனர்.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் வை. எம்.சி.ஏ அணி யாழ்ப்பாணம் றிம்மர் அணியை 62 க்கு 24 என்ற புள்ளியடிப்படையில் தோற்கடித்தது.

வை. எம். சி. ஏ. தரப்பில் எல்.அருள்தாசன் 22, எஸ். பி .தம்பு 18 புள்ளிகளையும் —

றிம்மர் அணியின் தரப்பில்ஆர்.வசந்தகுமார் 12 புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்தனர்.

இன்று மாலை இறுதியாட்டம் நடை பெறும். மாலை4.30மணிக்கு இந்த ஆட்டம் ஆரம்பமாகும்.

மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகும் பெண்கள் அணிகளுக்கான இறுதியாட்டத்தில் பமிலியன்ஸ் அணியைஎதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி விளையாடும்.

## சுன்னாகத்தில் . . .

(1–ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணி சங்கமமாகி யாழ். காங்கேசன்துறைவீதிவழியாக மருதனார் மடம் வரை தொடர்ந்தது

சுன்னாகம் சந்தியை மக்கள் பேரணி அண்மித்த போது தாழப்பறந்த ஹெலிக்கொப்டரையும் அரச படைகளையும் கண்டித்து சுலோகங்களை எழுப்பிய பேரணியினர் "ஹெலிக்கொப்டர் என்ன செய்யும் - அரசுக்கு அடிபணியோம்" என சத்தமிட்டனர்.

பேரணியினர் சென்ற பாதையில் சுமார் இரண்டு மணிநேரம் போக்குவரத்து தடைப்பட்டது.

மருதனார்மடம் சந்தையில் நடந்த கண்டன பொதுக் கூட்டத்துடன் பேரணி முடிவுற்றது.

தமிழ் மக்களின் கோரிக்கைகள் அடங்கிய நீண்ட மகஜர் ஒன்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு முகவரியிடப்பட்டு உடுவில் உதவி அரச அதிபருக்கு அனுப்பப்பட்டது.

## மூன்றில் ஒரு : . . .

(1–ம்பக்கத் தொடர்ச்சி)

யக்கா கூறினார்.

கலகெதர என்னும் இடத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் திருமதி. பண்டாரநாயக்கா பேசினார்.

திருமதி பண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது;

பிரார்த்தனை இயக்கத்தை நடத்தி மலையகத் தமிழர்களுக்கு தொண்டமான் வாக்குரிமையை பெற்றுக் கொடுத்து விட்டார். இன்று நாட்டின் தலைவர் திரு தொண்டமான் தான். திரு. ஜெயவர்த்தனவைத் திரு. தொண்டமான் ஒதுக்கி விட்டார்.

நான் தீவிரவாதிகளுடன் பேசத் தயார். அதற்கு முன்னர் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தி ஆட்சியில் தீவிரவாதிகளையும் பங்கு பற்ற வைக்க வேண்டும்.

அப்பொழுதுதான் அவர்களுடன் பேசி ஒரு முடிவுக்கு வரலாம். பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தும்படி பொது மக்கள் அரசை நிர்ப்பந்திக்க வேண்டும்.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா சொன்னார்.

## தமிழர் மூவர் . . .

(1–ம் பக்கத்தொடர்ச்சி]

நேரில் போய்ப் பார்க்கவே சென்று கொண்டு இருந்தனர்.

பேயாடிக்கூளாங்குளம் வெளிக்குளச் சந்திக்கு அருகில் வைத்து சீருடையினர் இக்காரை மறித்தனராம்.

### வானில் சென்றவர்கள் பார்த்துக் கொண்டிருக்க. . . .

காரின் பின்னால் வந்த வான் ஒன்றையும் சீருடையணிந்தவர்கள் மறித்தனராம்.

காரில் சென்றவர்களை இறக்கிச் சுட்டபொழுது வானில் இருந்தவர்கள் அதைப் பார்த்துக் கொண்டு நின்றனராம்.

அதன் பின்னர் வானைச் செல்ல அனுமதித்தனர் என்று கூறப்படுகிறது.

வானைச் செல்ல அனுமதித்த பின்னர்தான் இறந்தவர்களின் சடலங்கள் காரினுள் போட்டு எரிக்கப்பட்டதாம்.

வானில் சென்றவர்கள் இச்சம்பவம்பற்றி முதலில் வவுனியா அரச அதிபரிடம் முறையிட்டனர்.

அரச அதிபர் பின்னர் வவுனியா பொலீஸுடன் தொடர்பு கொண்டார்.

அதன் பின்னரே வானில் சென்றவர்கள் இச்சம்பவம்பற்றி வவுனியாப் பொலீஸில் முறையிட்டனர்.

காரில் சென்றவர்கள் லொறி மீட்பு வேலைகளுக்குத் தேவைப்படக் கூடும் எனக் கொண்டு சென்ற சுமார் எழுபத்தையாயிரம் ரூபா ரொக்கப் பணம் கொள்ளையடிக்கப்பட்டது. காரில் சென்றவர்கள் அணிந்திருந்த பதினெட்டுத் தங்கப்பவுண் எடையுள்ள நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டன.

## கச்சேரிக்கு அன்னையர் . . .

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி படையெடுப்பு நடத்தினர்.

தங்களின் பிள்ளைகளுக்கு ஏதாவது நடந்திருக்குமோ என்ற அச்சத்துடன் அவர்கள் கண்ணீரும் கம்பலையுமாக அரச அதிபரிடம் முறையிட்டனர்.

இதைத் தொடர்ந்து அரச அதிபர் திரு.எம் பஞ்சலிங்கம் யாழ் இணைப்பு அதிகாரி பிரிகேடியர் ரூபசிங்காவுடன் தொடர்பு கொண்டார்.

உண்மை நிலையை அறிய தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்களைச் சந்திக்க உறவினர்களை அனுமதிக்கும்படி அரச அதிபர், இணைப்பதிகாரியைக் கேட்டுக் கொண்டார்.

அதைத் தொடர்ந்து உறவினர்கள் சந்திப்புக்கு இணைப்பதிகாரி ஒழுங்கு செய்தார்.

அதன்படி, 23 தாய்மார்கள் பலாலி முகாமிலும் 3 தாய்மார்கள் கோட்டை முகாமிலும் உள்ள தமிழ் இளைஞர்களை இன்று காலை சந்திப்பர்.

# செய்திச் சாரம்

### அமெரிக்காவின் விருப்பம் இதுவாம்

புதுடில்லி, பெப். 10 இலங்கை இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதையேஅமெரிக்கா விரும்புகிறது.

இந்த விவகாரத்தில் இந்தியா எடுத்து வரும் முயற்சிகளை அமெரிக்கா பாராட்டுகிறது.

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பி. ஆர். பகத் இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்காவில் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டிருந்த அவர் இன்று புதுடில்லி வந்து சேர்ந்தார்.

டில்லி வந்து சேர்ந்த பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையிலேயே அவர் மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார்.

திரு. பகத் அமெரிக்க ஜனாதிபதி றேகனைச் சந்தித்துப் பேசியதும் குறிப்பிடத்தக்கது.

### தமிழ் இளைஞர்கள் பூஸாவுக்கு

மட்டக்களப்பு, பெப்.11 கல்லடி அதிரடிப்படை முகாமில் தடுத்துவைக்கப் பட்டிருந்த 75தமிழ் இளைஞர்கள் நேற்று பூஸாவுக்கு அம்பாறை வழியாக கொண்டு செல்லப்பட்டனர்.

### டிக்ஸிற்-லலித் சந்தித்தனர்

கடந்த சனி, ஞாயிறு தினங்களில் இந்தியதூதர் திரு. ஜே. என். டிக்ஸிற்றும் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இனப்பிரச்சினை சம்பந்தமாக இருவரும் பேசினர் என்று தெரிகிறது.

### புதுடில்லியில் ஹர்த்தால்

புதுடில்லி, பெப். 10 விலைவாசி உயர்வை ஆட்சேபித்து இன்று புதுடில்லியில் நடத்தப்பட்ட ஹர்த்தால் மிக அமைதியாக நடந்தது.

ஆங்காங்கே சில அசம்பாவித சம்பவங்கள் நிகழ்ந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

நூற்றுக்கும் அதிகமான பஸ்கள் சேதமாக்கப்பட்டதாகவும்–

சில பெண்கள் உட்பட ஆயிரத்து 300 பேர் கலகம் விளைவிக்க முயன்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org